Registerd as a News Paper at the G.P.O
Srilanka, Under No.KJV 59/87



விலை 5/=

# ஐக்கிய தீபம்

# AIKIYATHEEPAM

JAFFNA DISTRICT CO-OP COUNCIL

**சிந்தனைச் சுடர்**

சுயநலம் கூட்டுறவின்
முதல் எதிரி.
சுயநலவாதிகள்
கூட்டுறவில்
நுழைந்திருக்கும் வரை
அழிவிலிருந்து கூட்டுறவு
இயக்கத்தை பாதுகாக்க
முடியாது. *(யாரோ)*

தீபம் 01 | ஆனி 2005 | ஒளி - 5

கூட்டுறவு இயக்கத்தை அழியவிடாது கூட்டுறவாளர்கள் பாதுகாத்துக்கொள்வார்கள்

# கூட்டுறவு நிறுவனங்களின் இழப்புளை பெறும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பேன்

## சிறப்பு முகாமைத்துவ கற்கைநெறி ஆரம்ப விழாவில் யாழ்.அரச அதிபர்

கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் பெருந்தொகையிலான சொத்துக்களை இழந்த நிலையிலும் அவை மக்களுக்கு ஆற்றிய பணிகளை எவரும் மறந்துவிடமுடியாது. துனபங்கள் துயரங்கள் ஏற்படும் போதெல்லாம் மக்கள் சேவைக்கு தம்மை அர்ப்பணித்து செயற்பட்ட கூட்டுறவுத்துறையை எவரும் தட்டிக்கழித்து கைவிட்டுவிட முடியாது. தொடர்ந்தும் கூட்டுறவு நிறுவனங்கள் ஸ்திரத்தன்மையுடன் இயங்குவதற்கு இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் எனது ஒத்துழைப்பை முழுமையாக வழங்குவேன் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திரு.கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைசபையினால் நடத்தப்பட்ட சிறப்பு முகாமைத்துவ கற்கைநெறி ஆரம்ப விழாவில முதன்மைவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே.கணேஷ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் தலைவர் திரு. ப.கனகலிங்கம் தலைமையில் யாழ்.மாவட்ட கூட்டுறவு நுகர்ச்சி சமாச வளாகத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியின் ஆரம்ப விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருட்திரு டேவிட் அடிகளார், மௌலவி அலாவுதீன் ஆகியோர் ஆசி உரைகளை வழங்கினாகள்.

யாழ்.அரச அதிபர் திரு.கே. கணேஷ் இங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

எந்தவொரு நிறுவனத்தின் வெற்றியின் பின்னணியில் அந்நிறுவனத்தின் ஊழியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையே காரணமாக அமைந்துள்ளது. யுத்த சூழ்நிலைகளில் வன்னி மாவட்டத்தில் உள்ள உணவுத் தேவையை பூர்த்திசெய்வதில் பாரவூர்திக் கூட்டுறவுச் சங்கத்தின சேவையை நினைவுபடுத்திய அரசஅதிபர், அவர்கள்போல் காலம், நேரம், பாராது பல விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வைராக்கியத்துடனும், இலட்சியத்துடனும, நேர்மையுடனும் ஒவ்வொருவரும் கடமையாற்றவேண்டும்.

நாட்டுச் சூழ்நிலைகளையும் வேறு பலகாரணங்களையும் சாட்டாக முன்வைத்து எக்கருமத்தையும் ஆற்றுவதில் பின்நிற்கக் கூடாது. இதனை அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் நிர்வாகத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்துவது அவசியம். கூட்டுறவு ஊழியர்களின் சேவையின் தரம் உயர வேண்டும். சகலபொருட்களும் சங்கங்களில் வாங்கலாம் என்ற நிலையை உருவாக்கவேண்டும். கவர்ச்சிகரமான முறையில் விற்பனையை மேற்கொள்ள வேண்டும். (4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுக் கொடிக் கீதம்

எடுப்பு

**ஓங்கி எழும் கொடியே ஐக்கியம்**
**தாங்கிப் போற்றிடும் தக்கவர் பண்பினில் (ஓங்கி)**

தொடுப்பு

**வாழ்வளிக்கும் நல்ல வளம் பொருளே நாடு**
**தாழ்வையும் தகர்திடும் தகவோடு சீராக (ஓங்கி)**

முடிப்பு

**இம்மையில் உள்ள மக்கள் ஈடிலாங்கிருக்க**
**செம்மையில் தனித்துவம் சேர்ந்துமே சமமுற**
**உம்பருள் இந்திரன் உடையா கை வில்லின்**
**செம்பொருள் நிறமெல்லாம் சிறந்தொழி வீசிட (ஓங்கி)**

## கூட்டுறவுக் கொள்கைகள் (7)

- *தன்னிச்சையானதும், திறந்ததுமான அங்கத்துவம்*
- *சனநாயக அங்கத்துவக் கட்டுப்பாடு*
- *அங்கத்துவப் பொருளாதாரப் பங்கு கொள்ளல்*
- *இறைமையும் சுதந்திரமும்*
- *கல்விப் பயிற்சி அளிப்பும் தகவலும்*
- *கூட்டுறவுக்கு மத்தியிலான ஒத்துழைப்பு*
- *சமூகத்தின் மீதான கவனம்.*




யாழ்மாவட்டக்கூட்டுறவு முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் சிறப்பு முகாமைத்துவ கற்கை நெறியின் ஆரம்பவிழாவில் யாழ்.அரச அதிபர் திரு.கே.கணேஷ் உரையாற்றுவதையும் ஆசிகூறிய மதத் தலைவர்களையும் ஆலோசனைசபைத் தலைவர் திரு.ப.கனகலிங்கம் மற்றும கூட்டுறவாளர்களையும் பயிற்சியாளர்களையும் படத்தில் காணலாம்.

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தற்போதைய சூழ்நிலையில் யாழ்.மாவட்டத்திலுள்ள பனை தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் மட்டத்தில் விழிப்புணர்வுக்குழு ஒன்று அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இக்குழுவினர் சங்க ரீதியாக நேரில் சென்று அச்சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கருத்தரங்குகள் மூலம் ஆராய்வதுடன் அவற்றுக்கான தீர்வு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மானிப்பாய், சுன்னாகம், கோண்டாவில், ப.தெ.வ.கூ.சங்கங்களில் நடத்தப்பட்டதாகவும் இக்கருத்தரங்குகள் ஏனைய சங்கங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 83 ஆவது சர்தேச கூட்டுறவாளர் தினம்

# ஜூலை 30 இல் கூ.பேராளர் மாநாடு 31 இல் பேரணியும் பிரகடனமும்

83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவினை யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை வெகு விமரிசையாகக் கொண்டாடவுள்ளது.

இவ்விழாவினை சிறப்பாக நடத்துவது சம்பந்தமாக யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர், செயலாளர் ஆகியோர் வலய ரீதியாகச் சென்று அங்குள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்களுடன் கலந்துரையாடி அவர்களிடம் இருந்து பெற்ற அபிப்பிராயங்கள் கருத்துக்களுக்கு அமைவாக கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யூலை மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை கூட்டுறவுத் திணைக்கள உயரதிகாரிகள், செயலக உயரதிகாரிகள் முன்னிலையில் கூட்டுறவாளர் பேராளர் மாநாடு ஒன்றை நடத்தி அம் மாநாட்டில் எடுக்கப்படும் கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்பான தீர்மானங்களை 31 ஆம் திகதி மருதனார் மடத்தில் நடத்தப்படவுள்ள கூட்டுறவாளர் எழுச்சிக் கூட்டத்தில் பிரகடனப்படுத்தி உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளனர்.

இவ்வெழுச்சிக் கூட்டத்தினை ஒட்டி யூலை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்க முன்றலில் அமைந்துள்ள அமரர் கூட்டுறவாளர் வீரசிங்கம் அவர்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் பல.நோ.கூ.சங்கத்திற்கான புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இருமாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. சுப்பிரமணிய சர்மா அவர்களினால் நாட்டிவைக்கப்பட்டது.

நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சினால் யாழ் அரச அதிபர் திரு.கே.கணேஷ் ஊடாக சுமார் 20 லட்சம் ரூபா இக்கட்டிட வேலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 40 லட்ச ரூபா மதிப்பீட்டுடன் கட்டிமுடிக்கப்படவுள்ள இக்கட்டிட அடிக்கல்நாட்டு வைபவத்தில் யாழ்.கூ.அ.உதவி ஆணையாளர் திரு.செ.கனகசபாபதி, யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத்தலைவர் திரு.பெ.கனகசபாபதி, தமிழிழீழ நிர்வாகசேவையின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் திரு.சி.விஜிதரன், கூட்டுறவுப் பகுதிப் பொறுப்பாளர் திரு.பொ.புஸ்பகுமார் மற்றும் பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இக்கட்டிட வேலைகளில் பணியாளர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், அர்ப்பணிப்புடன் ஈடுபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவே நாட்டுயர்வு**

முதலாளித்துவ நிறுவனங்களுள் கூட்டுறவு நிறுவனம் மட்டுமே மிகச் சிறந்த நிறுவன அமைப்பாகும். எப்படியாவது நாம் கூட்டுறவு நிறுவன அமைப்பை பாதுகாக்க வேண்டும். ~ லெனின்

ஐக்கிய தீபம்

# 83 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம்

சர்வதேசக் கூட்டுறவாளர் தினம் ஆண்டு தோறும் வரும் யூலைத் திங்களில் வரும் முதலாவது சனிக்கிழமை சர்வதேசக் கூட்டுறவாளர்களாற் கொண்டாடப்பட்டு வரும் புனித தினமாகும்.

புனிதமான கூட்டுறவு இயக்கத்திலும் அது தாங்கி நிற்கும் கொள்கைகளிலும் தமக்குள்ள பற்றுறுதியையும் எடுத்தியம்பும் வகையில் 1923ம் ஆண்டு முதலாவது சர்வதேசக் கூட்டுறவாளர் தினம் உலகக் கூட்டுறவாளர்களினால் கொண்டாடப்பட்டது இன்று 83வது சர்வதேசக் கூட்டுறவாளர் தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

உலக சமாதானத்தையும் மனித சமுதாய மேம்பாட்டினையும் உணர்த்தும் வகையில் சார்ள்ஸ் போரியர் என்ற கூட்டுறவாளரினால் வடிவமைக்கப்பட்ட வானவில்லின் வர்ணஜாலங்களைக் கொண்ட ஏழுவர்ணக் கொடி சர்வதேசம் எங்கணுமுள்ள கூட்டுறவு நிறுவனங்களில் யூலைத்திங்கள் வரை பட்டொளி வீசிப் பறக்க விடப்பட்டிருக்கும்.

சாதி, சமய, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவகையில் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்தவல்ல கூட்டுறவு இயக்கமானது அதன் கொள்கைகளும், தத்துவங்களும் "ஆட்சியியல்" கோட்பாடுகளுக்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளன.

1995ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்ட தன்னிச்சையானதும், திறந்ததுமான அங்கத்துவம், ஜனநாயக அங்கத்துவக் கட்டுப்பாடும், அங்கத்தவர் பொருளாதாரப் பங்களிப்பு, இறைமையும், சுதந்திரமும், கல்வி, பயிற்சி அளிப்பும், தகவலும், கூட்டுறவுகளுக்கு மத்தியிலான ஒத்துழைப்பு, சமூகத்தின் மீதான கவனம் ஆகிய 7 கூட்டுறவுக் கொள்கைகள் பிரகடனப்படுத்தப்பட்டன.

கூட்டுறவு இயக்கத்தின் இப்புனிதமான கொள்கைகளையும், அவற்றில் பொதிந்துள்ள இலட்சியங்களையும் இன்றைய கூட்டுறவாளர்கள் தம் மனதில் இருத்தி, நலிவடைந்து போகும் நிலையில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களை மீளக்கட்டி எழுப்ப வேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள் நலிவுற்றாலும் கூட்டுறவு இயக்கம் என்னும் புனிதமான சொல் என்றும் நிலைத்திருக்கும்.

இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட அங்கத்தவர்களையும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களையும், தன்னகத்தே கொண்டுள்ளதும், அமரர் வீரசிங்கம் போன்ற புனிதமான பல கூட்டுறவுப் பெரியார்களைக் கொண்டதுமான தமிழர் தாயகப் பிரதேசங்களில் கூட்டுறவை அழியவிடாது பாதுகாத்துக் கொள்வது ஒவ்வொரு கூட்டுறவாளரதும் கடமையாகஇருக்கவேண்டும்.

கூட்டுறவு நிறுவனங்களை நிர்வகிப்பவர்கள், அங்கு கடமையாற்றுபவர்கள் தங்கள் தங்கள் நிறுவனங்கள் கொண்டுள்ள எல்லைப் பரப்பினுள் உள்ள கிராமங்கள் தோறும் வீடு, வீடாகவும், அங்குள்ள பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றுக்கு நேரில்சென்று கூட்டுறவு இயக்கத்தின் அவசியத்தினையும், அதனுடைய செயற்பாடுகளையும் அதன் உன்னத இலட்சியங்களையும் அதன் மூலமான சமூக, பொருளாதார மேம்பாடுகளை எடுத்து விளக்கி, கூட்டுறவு இயக்கத்திற்கு வலுவூட்டும் வகையில் கூடியளவு அங்கத்துவத்தைப் பெருக்கி, கூட்டுறவு இயக்கம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தின் தலைமைத்துவத்தில் இளைஞர்களும், மகளிரும் கூடிய அளவு பங்கேற்றுக்கொள்வதை இக்கூட்டுறவு தினத்தில் உறுதிப்படுத்திக்கொள்ள முதுபெரும் கூட்டுறவாளர் கள் முன்வருதல் அவசியமாகும்.

கூட்டுறவு இயக்கம் எதிர்காலத்தில் செழிப்புற்ற ஓர் வலுவான இயக்கமாக கட்டியெழுப்புதற்கு கூட்டுறவாளர்கள் மனத்தூய்மையுடனும் அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் இலட்சிய மனோ பாவத்துடன் கடமையாற்றுவதற்கு தம்மை அர்ப்பணித்துக் கொள்வது என இத்தினத்தில் திட சங்கற்பம் கொள்ளவேண்டும்.

கூட்டுறவில் ஒற்றுமை நிலவவேண்டுமானால் குடும்பத்தில் சமூகத்தில் நாட்டில் சமத்துவமும் சமாதானமும் மிளிர வேண்டும். ஒழுக்கமுள்ள சீரிய சமுதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்கவேண்டுமானால் றொபேட் ஓவனால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்ட கூட்டுறவு இயக்கத்துக்கு கூட்டுறவாளர்கள் தமது இதய பூர்வமான பங்களிப்பை வழங்கி கூட்டுறவை அழியவிடாது பாதுகாப்பதற்கு இத்தினத்தை எழுச்சிதினமாக அனுஷ்டிக்க முன்வர வேண்டும்.

*கூடி வாழ்ந்தால் கோடி நன்மை*

# வாடிக்கையாளர்களை ஊழியர்கள் அரவணைக்கவேண்டும் கூட்டுறவுத் துறையில் இன்னுமொரு புனரமைப்பு அவசியம்

***கூட்டுறவுச் சேவையில் சுமார் 22 வருடங்களுக்கு மேலாக கால்பதித்துள்ள திருகோணமலை மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் திரு.செ.தாமோதரம் திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் விற்பனையாளராகச் சேர்ந்து எழுதுநராகப் பதவியுயர்வு பெற்று சாதாரண பிரிவு கூட்டுறவுப் பயிற்சியில் தேர்ச்சி பெற்று சங்கத்தின் புலைமைப் பரிசிலுடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் வணிகமானி பட்டம் பெற்று சங்கத்தில் கடமையாற்றியபின் கல்வித் திணைக்களத்தில் பட்டதாரி ஆசிரியராக இணைந்து கடமையாற்றிய வேளையில் திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநராக, உப தலைவராக சேவையாற்றி பின் திருகோணமலை மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட திரு.செ. தாமோதரம் அவர்களின் பேட்டியின் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது.***

(பேட்டி - முற்றொடர்)

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பல பிரச்சனைகளை உலகம் எதிர்நோக்கி உள்ளது. நிறுவனங்களைப் பொறுத்தளவில் சில நிறுவனங்களில் அவற்றின் நோக்கங்கள் நல்லதாக அமைந்திருக்கும், அவற்றின் அமுலாக்கம் பிழையாக அமைந்திருக்கும். அதேபோல் அமுலாக்கம் நல்லதாக இருக்கும்போது நோக்கம் பிழையானதாக இருக்கும். ஆனால், கூட்டுறவுத்துறையைப் பொறுத்தவரையில் நோக்கம் நல்லதாக அமைந்துள்ளது. அமுலாக்கம் சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மாத்திரமே கூட்டுறவின் தலைமைத்துவத்தை வகிக்க முடியும் என்றும் அவர்களால்தான் கூட்டுறவு இயக்கத்தைச் சரியான முறையில் நிர்வகிக்க முடியும் என்றும் வலியுறுத்தி வருகிறார்கள். இந்த வலியுறுத்தலை ஒருவராலும் மாற்ற முடியாது. இதனை மாற்றுவது மிகவும் கடினமானதாகும். (இலங்கையைப் பொறுத்தளவிற் பெரும்பாலானோர் நிர்வாகக் கலாச்சாரத்தையே விரும்புகிறார்கள். முகாமைத்துவ கலாச்சாரத்தை விரும்புகிறார்கள் இல்லை. யார், யாராலையோ எப்பவோ உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்களையும், பிரமாணங்களையும் தொடர்ந்து வருகிறவர்கள் தங்கள் தனையின்றி நடைமுறைப்படுத்திக் கொண்டு போவதுதான் எமமிடையே உள்ள பாரிய பலவீனமாகும். சகல மாற்றங்களையும், நடைமுறை மாற்றங்களையும், புதுமைகளையும் புகுத்தக் கூடியவர்கள் இருக்கமாட்டார்கள்.

இந்நிலையில் முகாமைக் கலாச்சாரம் நிலவுகின்ற அல்லது காணப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கின்ற பௌதீக, மனித வளங்களை உச்சப் பயன்பாடு அடையச்செய்யக் கூடிய முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய தன்மை அங்கு காணப்படும். முகாமைக் கலாச்சாரம் என்று கூறும்போது ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட சித்தாந்தம் இருக்க மாட்டாது. நிலைமைக்கு ஏற்றவாறு புதிய புதிய சித்தாந்தங்களை வகுக்கவேண்டிய நிலைமை உருவாகும். இதனைவிட முயற்சியின்மை என்ற ஒரு சித்தாந்தமும் உண்டு. இதன்படி இருக்கின்ற சூழ்நிலைகளை அவதானித்து இதுவரையும் காணப்படாத புதிய கருமத்தில் ஈடுபடுதல். கூட்டுறவுத் திணைக்களங்களில் இருப்பவர்கள் நிர்வாகக் கலாச்சாரம் மேலோங்கியவர்களாக இருப்பதினால் முகாமைக் கலாச்சாரத்தை விருத்தி செய்வது பற்றியோ முயற்சியாண்மை என்றதொன்று இருக்கின்றது பற்றியோ எவருமே சிந்திப்பதில்லை. இதில் நாம் கூடியளவு அக்கறை செலுத்தவேண்டும்.

தற்போது வர்த்தக உலகில் முக்கியத்துவம் பெற்றுள்ள உற்பத்தித்திறன் என்ற சொல்லும், போட்டியிடும் திறன் என்ற சொல்லும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. உற்பத்தித்திறன் உள்ள ஒரு நிறுவனத்துக்குத்தான் போட்டியிடும் திறனும் இருக்கும். போட்டியிடும் திறன் உள்ள நிறுவனமே தன்னுடைய எதிரிகளை முறியடித்து போட்டிச் சந்தையில் தனது நிலைமைப் பங்கைத் தக்க வைத்துக்கொள்ளும் உற்பத்தித் திறன் என்று கூறும் போது, குறைந்தளவு உள்ளீடுகளைப் பயன்படுத்திக் கூடியளவு பயன்பாட்டைப் பெற்றுக்கொள்வதுதான் உற்பத்தித் திறனாகும்.

குறைந்தளவு உள்ளீடுகளைப் பயன்படுத்தி, கூடியளவு பயன்பாட்டைப் பெறும்போது, சிக்கனத்துடன் கூடிய தரமான உற்பத்தி செய்து. போட்டிச் சந்தையில் எதிரிகளை முறியடித்து, ஸ்திரத்தன்மையையும், நன்மதிப்பையும் பெற்றுக்கொள்ளவேண்டும். இத்தகைய எண்ணக் கருக்கள் கூட்டுறவு ஊழியர்களிடம் எவ்வளவு தூரம் பரப்பப்பட்டுள்ளது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. அவர்களைப் பொறுத்தளவில் நிர்வாகக் கலாச்சாரத்தைப் பின்பற்றிப் பொருட்களைக் களஞ்சி யத்தில் இருந்து எடுத்து வருவது. அவற்றை மட்டும் விற்பனை செய்து விட்டு வேறு பொருட்களைக் கேட்டால் அவற்றை இல்லை என்று சொல்வது. குறிப்பிட்டுச் சொல்வதானால் இவர்கள் வாடிக்கையாளர்களிடம் தனிப்பட்ட அக்கறை செலுத்துவதில்லை. அத்துடன் தனிப்பட்ட அக்கறை செலுத்துவதற்கான மனப்பாங்கும் அவர்களிடம் இல்லை. தனியார் வர்த்தகத்துறையினர் வாடிக்கையாளர்களை அனுசரித்து "அம்மா வாருங்கோ, ஐயா வாருங்கோ, உங்களுக்கு என்ன வேணும்? எல்லாப் பொருட்களும் உங்களுக்கு எடுத்துத் தரலாம்" என்று அன்பொழுகப் பேசி வரவேற்பார்கள். தனியார் துறையினர் பேணுகின்ற முகாமைக் கலாச்சாரம் கூட்டுறவுத் துறையில் அறவே இல்லை. இதுதான் இருக்குது, இதைக் கொண்டுபோ, கடை திறக்கும், பூட்டும் நேரத்தைப் பற்றியும் அக்கறை இல்லை. நேரத்திற்குத் திறந்து நேரம் செல்லப் பூட்டுவோம் என்ற எண்ணம் கூட்டுறவுப் பணியாளர்களிடம் இல்லை.

இன்றைய சூழ்நிலையில் பாவனையாளர்கள் தங்களுக்குரிய நுகர்ச்சிப் பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்வதையே விரும்புகிறார்கள். தனித்தனியே ஒவ்வொரு இடத்திலும் தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதை நேரச் சிக்கனம் கருதி அவர்கள் விரும்பமாட்டார்கள். இந்நிலையில் கூட்டுறவு நிறுவனங்கள் பரந்துபட்ட வகையில் ஒரே கூரையில் சகல நுகர்ச்சிப் பொருட்களையும் பெறத்தக்க வகையில் எனவே, பரந்துபட்ட வகையில் கடைத்தொகுதிகள் அமைக்கப்படவேண்டும்.

தனியார் துறையினர் பேரளவு மூலதனத்துடனும், இராட்சதத் தொழில் நுட்பத்துடனும், புதிய புதிய தந்திரோபாயங்களுடன் விற்பனைத் துறையில் படை எடுத்துவரும் அதேவேளை, கூட்டுறவுத்துறையின் பழைய காலத்து அம்பு, வில்லு காலத்தில் இருந்து கொண்டு எம்மால் எதுவும் செய்ய முடியாதுள்ளது.

அவர்களுக்கு ஈடுகொடுக்கத்தக்க வகையில் எம்மிடம் எதுவும் இல்லை. அடிப்படைச் சம்பளங்களையோ, சம்பள உயர்ச்சிகளையோ கொடுக்கக்கூடிய நிலையில் இல்லாத கூட்டுறவு நிறுவனங்கள் என்ன செய்ய முடியும்.

இந்நிலையில், கூட்டுறவுத்துறையில் இன்னுமொரு புனரமைப்பு அவசியம் தேவைப்படுகின்றது. அப்புனரமைப்பு மாறிவரும் புதிய சூழ்நிலைக்கேற்ற வகையில் அதற்குத் தேவையான புதிய தொழில்நுட்ப அறிவு, புதிய தந்திரோபாயங்கள், புதிய போட்டியிடும் தன்மையும் இருக்கவேண்டும். ஆனால் அதன் இறுதி இலட்சியம் கூட்டுறவுத் தத்துவத்தைக் கொண்ட புதிய சமுதாயம் உருவாக்குவதுடன் சமூக மேம்பாட்டையும் கொண்டிருக்கவேண்டும். (வளரும்)

# கூட்டுறவுத் தகவல் களஞ்சியம்

8 இலங்கையில் 1911ம் ஆண்டு முதன்முதலாகக் கூட்டுறவுச் சட்டம் உருவாக்கப்பட்டது.

8 1913ம் ஆண்டு விவசாயத் திணைக்களப் பதிவாளரிடம் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்யும் கடமை ஒப்படைக்கப்பட்டது. முதலாவது கூட்டுறவுச் சங்கம் தென் மாகாணத்தில் 'வெல்ல பொடபத்து" என்னும் இடத்தில் பதிவு செய்யப்பட்டது.

8 1914ம் ஆண்டு முதலாவது தேசியக் கூட்டுறவு மாநாடு கொழும்பில் நடைபெற்றது.

8 1917ம் ஆண்டு உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதி உருவாக்கப்பட்டுக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு அரசாங்கம் முதன் முதலாகக் கடனை வழங்கியது.

8 1921ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டு, கடன் சங்கங்கள் தவிர்ந்த ஏனையவகைச் சங்கங்களும், இரண்டாம் படிச் சங்கங்களும் பதிவு செய்யப்பட்டன.

8 1923ம் ஆண்டு முதல் சர்வதேசக் கூட்டுறவு தினவிழா கொண்டாடப்படுகிறது.

8 1924ம் ஆண்டு முதலாவது மேற்பார்வைச் சமாசமாக 'கொழும்பு மாவட்ட சமாசம்' பதிவு செய்யப்பட்டது.

8 1929ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் முதலாவது 'கூட்டுறவு மாகாண வங்கி' பதிவு செய்யப்பட்டது.

8 1930ம் ஆண்டு, 'கூட்டுறவுத் திணைக்களம்' நிறுவப்பட்டது. முதலாவது காணி அடைமான வங்கி நீர்கொழும்பில் பதிவு செய்யப்பட்டது.

8 1931ம் 32ம் ஆண்டுகளில் பால் விநியோகம், வள்ளச் சேவை, பாடசாலைச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன.

8 1942ம் ஆண்டு யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் முதலாவது 'பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்' ஆரம்பிக்கப்பட்டது.

8 1935ம் ஆண்டு முதலாவது 'கூட்டுறவு வைத்தியசாலை' மூளாயில் பதிவு செய்யப்பட்டது.

8 1936ம் ஆண்டு 16ம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் கொண்டுவரப்பட்டது.

8 1937ம் ஆண்டு 'வட பகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை' பதிவு செய்யப்பட்டது.

## பணியாளர் சீருடை வழங்கல்

வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, கொத்தணியின் வடிசாலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், பாதுகாப்புச் சேவையில் ஈடுபடும் பணியாளர்களுக்கும் நடப்பு வருடத்திற்கான இலவச சீருடையை 24.06.2005 ஆந் திகதி நடைபெற்ற பணியாளர்களுடனான கலந்துரையாடலில் வழங்கியுள்ளது.

## முன்பள்ளி ஆசிரியர், மாணவர்களுக்கான இலவச சீருடைத்துணி வழங்கல்.

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி தனது அங்கத்துவ சங்கங்களான சங்கானை, தெல்லிப்பளை, சுன்னாகம், மானிப்பாய், பண்டத்தரிப்பு, கோண்டாவில், காரைநகர், ஆகிய பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் நடாத்தப்படுகின்ற 70 முன்பள்ளிகளைச் சேர்ந்த 1997 மாணவர்களுக்கும், 107 ஆசிரியர்களுக்கும் இவ்வருடத்திற்கான இலவச சீருடைத்துணி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அச்சீருடைத்துணி அடுத்த மாத முற்பகுதியில் வழங்கப்படவுள்ளதாக கொத்தணி பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

# ஊழியர் சேமலாப நிதியம்
# Employees Provident Fund

ஓய்வுகால நலனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சமூகநல பாதுகாப்புச் சட்டங்களில் ஒன்றாக இது விளங்குகிறது. இது 1958ம் ஆண்டின் 15ம் இலக்கச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இச்சட்டம் தொடர்பாக 1970, 71, 81, 85, 86, 92களில் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது.

## அங்கத்துவம்

அரச, உள்ளூராட்சிச் சேவைகள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள, உளளூராட்சி அதிகார சபையின் கீழ் பணியாற்றும் ஊழியர்கள் தவிர, அனைத்து ஊழியர்களும் இதன்கீழ் உள்ளடக்கப்படுவார்கள். அதாவது அரச ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளடங்கும் ஊழியர்கள் தவிர்ந்த (தற்போது பங்கேற்பு ஓய்வூதியத் திட்டம் Contributory Pension Scheme) அனைத்து ஊழியர்களும் இதற்குள் உள்ளடக்கப்படுவர். அவர்கள் நிரந்தர, நிரந்தரமற்ற பயிற்சியிலுள்ள தற்காலிக, அமைய, நாட்சம்பள, ஒப்பந்த, துண்டுவீத அடிப்படையில் என எவ்வகையினுள் அடங்கினும் இத்திட்டத்திற்குள் அடக்கப்படுவர்.

## விதிவிலக்கு

1. வீட்டு வேலையாட்கள் (Employment in domestic service)
2. குற்றவாளிகள் அல்லது மாற்றுவரவுடையோருக்குப் பயிற்சியளிக்கும் நிறுவனங்கள், தர்மஸ்தாபனங்களாகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் போன்றன ஊழியர் சேமலாப நிதித்திட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்டுள்ளது.

## குறிப்பு:

தர்மஸ்தாபனமாகப் பதிவு செய்யப்பட்டவையும் 10 பேருக்கு மேல் தொழிலாளரைத் தொழிலுக்கு அமர்த்தியிருப்பின் அவையும் ஊழியசேமலாப நிதிக்குள் உள்ளடக்கப்படுவர்.

## உதவு தொகை

உதவு தொகை செலுத்துவதற்கான பொறுப்பு தொழில் தருநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊழியரின் சம்பளத்தில் இருந்து 8% கழிக்கப்பட்டு தொழில் தருநரின் 12% சேர்த்து மொத்தமாக 20% மத்திய வங்கியில் ஊழியரின் பெயரில் வைப்பு செய்வதற்கே மத்திய வங்கிக்கு அனுப்புதல் வேண்டும்.

குறித்த மாதத்திற்குரிய உதவுதொகை அடுத்து வருகின்ற மாதத்தின் கடைசி நாள் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். தாமதம் ஏற்படின் கீழ்வரும் அடிப்படையில் தண்டப்பணம் அறவிடப்படும்.

1 நாளில் இருந்து 10 நாளுக்கு இடைப்பட்ட தாமதம் 5%
10 நாளில் இருந்து 1 மாதத்துக்கு இடைப்பட்ட தாமதம் 15%
1 மாதத்தில் இருந்து 3 மாதத்துக்கு இடைப்பட்ட தாமதம 20%
3 மாதத்தில் இருந்து 6 மாதம் இடைப்பட்ட தாமதம் 30%
6 மாதத்தில் இருந்து 12 மாதம் இடைப்பட்ட தாமதம் 40%
12 மாதத்துக்கு மேற்படின் தாமதம் 50%

இவ்வாறு அறவிடப்படும் தண்டப்பணத்தின் ஒரு பகுதி ஊழியருக்கு வட்டியாக வழங்கப்படும்.

## விதிவிலக்கு:

குறித்த தொழில்தருநர் ஊழியர் சேமலாப நிதி செலுத்துவதற்கான தாமதம் தனது சக்திக்கு அப்பாற்பட்ட காரணத்தால் ஏற்பட்டதென (தபால் தாமதம், இயற்கை அனர்த்தம், வேலை நிறுத்தம்) தொழில் ஆணையாளருக்கு நிரூபிப்பின் தண்டப்பணத்தில் இருந்து விலக்களிக்கப்படும்.

## தொழில்தருநரைப் பதிவு செய்தலும் ஊழியரைப் பதிவு செய்தலும்

முதலாவது ஊழியர் வேலையில் அமர்த்தப்பட்டு 14 தினங்கள் மேற்படுவதற்கு முன்னர் டீ பத்திரம் (D) இரு பிரதிகளில் பூரணப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டு அண்மையில் உள்ள தொழிற் காரியாலயத்தில் பாரப்படுத்துவதன் மூலம் தொழில் தருநரின் பதிவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எல்லா ஊழியர்களுக்கும் "ஏ, பீ, எச்" பத்திரங்கள் (A, B, H form) பூரணப்படுத்தப்பட்டு அண்மையில் உள்ள தொழிற் காரியாலயத்தில் பாரங்கொடுத்து ஊழியரைப் பதிவு செய்ய முடியும்.

## சம்பாத்தியம் கணிப்பிடும் முறை

ஒரு ஊழியரின் மொத்தச் சம்பாத்தியம் பங்களிப்புக்காகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். மொத்த சம்பாத்தியத்தினுள் பின்வருவன உள்ளடக்கப்படும்.

1. வேதனம் / சம்பளம் அல்லது கட்டணம்
2. வாழ்க்கைச் செலவுப்படிகள் 1 விசேட வாழ்க்கை செலவுப்படிகள் மற்றும் அதையொத்த வேறு படிகள்
3. விடுமுறைத் தினத்திற்காகக் கொடுக்கப்பட்ட சம்பளம் / வேதனம்
4. தொழிலாளிக்கு வழங்கப்படும் சமைத்த மற்றும் சமைக்காத உணவுகளின் பணப்பெறுமதி
5. துண்டு வீத கொடுப்பனவும் ஊழியரின் அடிப்படைக் கொடுப்பனவும்
6. பதிற் கடமைக் கொடுப்பனவு, முதலியன ஆகும்.

பங்கு லாபம் (Bonus) மேலதிக நேரக் கொடுப்பனவுகள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் (Incentives) முதலியன கணிப்பீட்டுக்குள் உள்ளடக்கப்படுவதில்லை.

## உதவு தொகை செலுத்தும் முறை

ஊழிய சேமலாப நிதியத்தினுள் பதிவு செய்யப்பட்டதன் பிரதி ஒன்று தொழில் வழங்குநருக்கு அனுப்பப்படும் அப்பிரதி கிடைத்ததும் அருகிலுள்ள தொழில் அலுவலகத்துக்குச் சென்று C படிவத்தினைப் பெற்று 3 பிரதிகளில் பூரணப்படுத்தி, அதனுடன் உதவுதொகையினை அதிகாரி ஊழியர் சேமலாபத்தில், இலங்கை மத்திய வங்கி என்பவரின் பெயரில் காசோலை வரைந்து மத்திய வங்கிக்கு அனுப்புதல் வேண்டும். C படிவத்தில் ஒன்றினை அருகிலுள்ள தொழில் அலுவலகத்துக்கும் மற்றொன்றினைத் தொழில் வழங்குனர் தன் பராமரிப்பிலும் பேணி வருதல் வேண்டும்.


## கணக்குகளினை தொடர்புபடுத்தல்

ஒரு நிறுவனத்தில் இருந்து இன்னொரு நிறுவனத்துக்குச் செல்லும் ஊழியர் அந்த இரண்டு நிறுவனங்களிலும் உள்ள கணக்குகளை இணைப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இதற்காக முதல் நிறுவனத்தின் பீ (B) படிவத்துடன் ஜீ (G) படிவம் பூர்த்தி செய்து இரண்டாவது நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்தின் தொழில் அலுவலகத்துக்குச் சென்று சமர்ப்பித்தல் வேண்டும்.

## உதவு தொகை தவறான கணக்குக்கு செலுத்தப்பட்டால் சரி செய்யும் முறை

ஒரு ஊழியருக்குச் செலுத்த வேண்டிய உதவு தொகை இன்னொரு ஊழியரின் கணக்குக்குத் தவறுதலாகச் செலுத்தப்பட்டால் அதனை சரியாக்குவதற்கு, சரிப்படுத்தும் படிவம் (Rectification form) பூரணப்படுத்தி மத்திய வங்கிக்கு அனுப்புவதன் மூலம் சரிப்படுத்தலாம்.

(மிகுதி அடுத்த இதழில்)



மானிப்பாய் பல நோக்குக் கூ.சங்கத்திற்கான புதிய இருமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் யாழ்.கூ.அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.செ.கனகசபாபதி காளாஞ்சு பெறுவதையும் சங்கத் தலைவர் திரு.மா.செல்வராஜா உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். படத்தில் யாழ்.மாவட்டகூட்டுறவு சபைத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி, தமிழீழ நிர்வாகசேவை யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சி.விஜிதரன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு.எஸ்.சுப்பிரமணிய சர்மா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

### கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

# நுகர்ச்சி, கல்வி சேவைகளை ஆற்றிவருவது பாராட்டத்தக்கது

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூ.சங்கம் தனது நுகர்ச்சிச் சேவையுடன் கல்விச் சேவைகளையும் திறம்பட ஆற்றி வருகின்றது. தனது சங்க எல்லைப்பரப்பிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி வருகின்றமை. ஒரு முன்மாதிரியான செயற்பாடாகும். புனிதமான கூ.இயக்கத்தின் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நாம் பரப்பி வருவோமேயானால் கூட்டுறவை அழியவிடாது இளம் சந்ததியினர் மூலம் பாதுகாத்துக்கொள்ளலாம் என்று யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி குறிப்பிட்டுள்ளார்.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய 83 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியான க.பொ.த.சா. தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்திற்கு முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு பேசும்போதே திரு.பெ.கனகசபாபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்விழா சங்கத்தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் சங்கக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு ஜீலை மாதம் முழுவதும் சங்கக் காரியாலயம், கிளைகள் உட்பட அனைத்து இடங்களிலும் கூட்டுறவுக் கொடிகளை பறக்கவிட்டும் கொடிவிற்பனை, சங்கத் தொழிற் பரப்பில் வாகனப் பவனி, பல்வேறு கருத்தரங்குகள், சிரமதானம், புத்தக அறிமுகம், புத்தக கண்காட்சி, திரைப்படவிமர்சனம், பணியாளர் ஊக்குவிப்பு, கூட்டுறவாளர் கௌரவம், பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்குதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளையும் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது.

## கூட்டுறவு கீதம்

*பல்லவி*

கூட்டுறவு மந்திரத்தை சொல்லுவோமே ~ இங்கு
கூடிடும் பகை பிணியை வெல்லுவோமே [கட்டு]

*அனுபல்லவி*

நாட்டில் வாழ்வோங்கி நிலைபெறவே ~ நல்ல
ஞானப்பெரியோர்கள் நாட்டி வைத்த [கட்டு]

*சரணம்*

அன்புடன் வாய்மைதனில் நேர்மை கொண்டு
ஆர்வமதால் அனைவருமே ஒன்றாய் கண்டு
இன்புடனே பெரு வாழ்வில் உழைத்தலென்றும்
உயர்வான கூட்டுறவுக் குயிராமன்றோ [கட்டு]

துன்புடனே மக்களிங்கு சோர்ந்தபோது
தெய்வம் வந்துற்றதென வந்தணைந்து
தென்புதரும் கல்வி சுதந்திரமும் மேலாம்
தேச பக்தி விவசாயம் செழிக்க செய்யும் [கட்டு]

கூட்டுறவு நெறிகளே வேதமாகும்
கொண்டவற்றைக் கடைப்பிடிப்போர் மேலோராவர்
வாட்டமுறும் தொழிலாளிக் கூட்டாளிக்கும்
வாழ்வளிக்கும் உழவருக்கும் வாழ்வு நல்கும் [கட்டு]

தேட்டத்தை சீராகப் பேணச் செய்யும்
செப்பு வட்டிக் கொடுமைக்கு காலனாகும்
நாட்டிற்கு ஊட்டத்தை நல்கவல்ல
நலமிக்க வெறொன்று இல்லை என்று

சாதியொடு சமயநெறிப் பூசல்போக்கி
சேரும் அரசியல் வாழ்க்கை சார்பு நீக்கி
பேதங்கள் தலைதூக்காப் பான்மையாக்கி
பாரினிலே மாந்தர்க்கு வாழ்வுசேர்க்க [கட்டு]

பேதமின்றி கைவிரல் பொற் திறங்களாக்கி
பேசிவரும் சமத்துவத்தை செயலிற் காட்டி
நீதிமிகு உயர் தெய்வநாட்டில் இன்பம்
நீர்காணக் கூட்டுறவு நிலைக்கு செய்வீர் [கட்டு]


யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை (வது)
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
1000 கதிரைகளுடன் வாடகைக்கு விடுதல்

☞ உங்கள் திருமண வைபவங்களையும்,
☞ உங்கள் பிள்ளைகளின் நாட்டிய, இசை அரங்கேற்றங்களையும்,
☞ உங்களால் நடத்தப்படும் கலை, கலாசாரவைபவங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், மற்றும் பயிற்சிப் பட்டறைகள் ஆகியவற்றை குறைந்த செலவில் நிறைந்த மனதுடன் நடத்தி முடிப்பதற்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தினை நாடுங்கள்."

*குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையைப் பெற்றிட*

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், இல:12 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

*என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு உங்கள் மண்டபத் தேவைகளைபூர்த்திசெய்யுங்கள்.*

செயலாளர், *யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை.*

# கூட்டுறவு இயக்கத்தை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவுச் சங்கங்கள் இன்று நிவாரண விநியோகத்தில் ஈடுபட்டுள்ளது. நிவாரண விநியோகம் நிறுத்தப்பட்டால் நிதி ஸ்திரத்தன்மையில் மோசமாக பாதிக்கப்பட்ட சங்கங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது. என்று கூறிய அரச அதிபர் சிறந்த நிதி நிர்வாகக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி சிறந்த முகாமைத்துவத்தை ஏற்படுத்த இந்த முகாமைத்துவ பயிற்சி அவசியமாகும். இந்நிலையில் கூட்டுறவாளர்கள், பணியாளர்கள், இலட்சிய நோக்குடன், அர்ப்பணிப்புடன் பணிகளில் ஈடுபட முன்வரவேண்டும். என்று கேட்டுக்கொண்டார்.

யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர்பிரிவுப் பொறுப்பாளர் கலைவிழி பேசுகையில் கூறியதாவது:

நீண்டதொரு முயற்சியின் பலனாக இப்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு இன்று நடைபெறுகின்றது. யுத்த காலங்களில் மக்களோடு மக்களாக இருந்து செயறபட்டு அவர்களின் துன்பதுயரங்களைப் போக்கியவர்கள் கூட்டுறவாளர்கள். இத்தகைய கூட்டுறவாளர்களின் பணி மேலும் சிறக்கவும் துறை சார்ந்த நிபுணர்களை உருவாக்கவும் இந்த சிறப்புப் பயிற்சிநெறி துணைபுரியும் என்று கூறினார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி பேசுகையில் கூறியதாவது.

### கூட்டுறவாளர்கள் கூட்டுறவை பாதுகாப்பார்கள்

கூட்டுறவு இயக்கம் தேய்ந்து போகின்றது. நலிவடைந்து செல்கின்றது. என்றெல்லாம் தற்போது பேசப்பட்டு வருகின்றது. புனிதமான ஒரு இயக்கத்தை எவராலும் ஒருபோதும் அழிக்கமுடியாது. இன்றைய சூழ்நிலையில் கூட்டுறவு இயக்கம் நலிவடைந்துள்ளதாக காணப்பட்டபோதும் அதனை அழியவிடாது கூட்டுறவாளர் பாதுகாத்துக்கொள்வார்கள்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையைப் பொறுத்தவரையில் தனது கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மூலம் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும் தனிப்பட்ட மாணவர்களுக்கும் சாதாரணதர, உயர்தர பயிற்சிகளை அளித்து வருகின்றது. இப்பயிற்சிகளின் இறுதியில் வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தின் பொதுப் பரீட்சைக்குத் தோற்றி சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

நிலுவையில் இருந்த கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு வேலைகளை நிறைவு செய்வதற்காக முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (வடக்கு கிழக்கு மாகாணம்) திரு.கே.சண்முகலிங்கத்தின் ஆலோசனையின் பேரில் யாழ்.கூட்டுறவுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஏற்கனவே உயர்தரப் பயிற்சிபெற்ற மாணவர்களைத் தெரிவுசெய்து உத்தியோகப்பற்றற்ற துரித கணக்காய்வாளர் பயிற்சி அளித்து அவர்கள் மூலம சங்கங்களின் கணக்காய்வு வேலை நிறைவு செய்ததுடன் அவர்கள் இன்று கூட்டுறவுப் பரிசோதகர்களாக தெரிவு செய்யப்பட்டு கூட்டுறவுத் திணைக்களங்களில் இணைந்துள்ளார்கள். இது எமது சாதனையாகும்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் இணைந்து நடத்திய கருத்தமர்வில் மீண்பிடியியல் டிப்பிளோமா பயிற்சி நெறியை பல்கலைக்கழக மட்டத்தில் நடத்துவதற்கு ஆலோசனை தெரிவித்தபோது அதனை ஏற்று இன்று அப்பயிற்சியை யாழ்.பல்கலைக்க்ழகம் அழித்து வருகின்றது. அத்துடன் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் கடற்றொழில் பரிசோதகர்களுக்கும் மாவட்டக் கூட்டுறவுச் சபை பயிற்சி அழித்துள்ளது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்நிலையில், இன்று யாழ். மாவட்ட முகாமைத்துவ அபிவிருத்தி ஆலோசனைச்சபையினால ஆரம்பித்து வைக்கப்படவுள்ள சிறப்பு முகாமைத்துவ கற்கை நெறிக்கான சகல உதவிகளையும் யாழ்.மாவட்டக் கூட்டுறச் சபை செய்யும் என்றும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர்களையும் சபை கொடுத்துதவியுள்ளது என்றும் கூறினார்.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.சொலமன் சூ.சிறில் பேசுகையில் கூறியதாவது.

என்றும் மனித குலம் காணாத ஒப்பற்ற சமுதாயத்தை உருவாகும் நோக்குடன் கூட்டுறவின் தந்தை என பாராட்டப்படுகின்ற றொபேட் ஓவன் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த கூட்டுறவு இயக்கமானது இன்னும் ஆரம்ப நிலையிலேயே நிற்கின்றது. இதற்கு காரணம் ஸ்ரீலங்காவின் அரசியல், சமூக, பொருளாதார காரணிகளாகும். இது எமக்கு மிகுந்த கவலையையும் ஏமாற்றத்தையும் தருகின்றது.

கூட்டுறவின் உண்மையான இலக்கு, இலட்சியம், சேவை முழுமை பெறவேண்டுமாயின், அது மக்களை முழுமையாக சென்றடைய வேண்டுமாயின், அதன பங்காளிகளான அனைவரினதும் மன நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். எங்கள் தேசம், எங்கள் நிறுவனம், எங்கள் சொத்து, எங்கள் மக்கள் என்ற உணர்வு எம்மிடையே ஏற்படாதவரை எந்த பயிற்சிகளோ அல்லது சமகால பட்டறைகளோ பலன் அளிக்கப் போவதில்லை. இது எமது கடந்த கால பட்டறிவாகும். எமது தேசிய வாழ்வையும் வளத்தையும் மேம்படுத்தி உணர்த்தும் என்ற லட்சிய போக்குடைய தலைமுறை இன்று எமக்கு தேவை. இதைதான் இந்த தேசம் விரும்பி நிற்கின்றது. வரவேற்கின்றது. எனவே இன்று ஆரம்பித்து வைக்கப்படும் பயிற்சி மூலம் எமது இலட்சியம், குறிககோள் நிறைவேறும் என்று நம்புகின்றோம் என்று கூறினார்.

இவ்விழாவில் வடமாகாகாண கடற்றொழிலாளர் கூ.ச.சமாசத்தின் தலைவர் திரு.சி.தவரத்தினம், யாழ்.மாசி.க.வ.கூ.ச. சமாசத் தலைவர் திரு.சு.சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

பயிற்சி நெறியை யாழ்.கூ.அ. உதவி ஆணையாளர் திரு.செ.கனகசபாபதி ஆரம்பித்துவைத்தார்.

ஆலோசனைசபை செயலாளர் திரு.பொ.சண்முகசுந்தரம் வரவேற்புரையையும், இயக்குனர் வே.தர்மராசா நன்றி உரையையும் ஆற்றினர்.

# 83 ஆவது சர்வதேச.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின் சிலைக்கு மாலை அணி வித்து பின் அங்கிருந்து கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள், கூட்டுறவாளர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள் கலந்துகொள்ளும் எழுச்சி ஊர்வலம் ஒன்றை மருதனார் மடம்வரைநடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

31 ஆம் திகதி நடைபெறவுள்ள எழுச்சிக் கூட்டத்தில் அனைத்துக் கூட்டுறவாளர்களையும் பெருமளவில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

இவ்விழாவினை ஒட்டி பாடசாலை மாணர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கிடையிலான பேச்சு, கட்டுரை, குழுப் பாடல், ஆகியவற்றில் போட்டிகளும் நடத்தப்படவுள்ளது.

# யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை வ.து

## 83 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின விழா போட்டிகள்

83 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு வழமைபோல் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, சித்திரப்போட்டி, வினாடி வினாப்போட்டி என்பவற்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
போட்டிகள் யாவும் 4 பிரிவுகளாக தமிழ்மொழிமூலம் நடத்தப்படும்.

**போட்டிகள் விவரங்கள் தொடர்பான தரங்களும், தலைப்புகளும் பின்வருமாறு:**

| தரம் | போட்டிகள் விபரம் | நேரம் | தலைப்புக்கள் |
|---|---|---|---|
| அதி மேற்பிரிவு தரம் 13 தரம் 12 | கட்டுரை | 1.5மணி (1200 சொற்களுக்கு குறையாமல்) | மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு கூட்டுறவு அமைப்பே சிறந்ததாகும். |
| | பேச்சு | 5-7 நிமிடங்கள் | |
| | சித்திரம் | 2மணித்தியாலம் | உலகமயமாக்கலும் கூட்டுறவும் |
| மேற்பிரிவு தரம் 11 தரம் 10 | கட்டுரை | 1மணி (800 சொற்களுக்கு குறையாமல்) | சமூக பொருளாதார சமத்துவத்தில் கூட்டுறவின் பங்கு. |
| | பேச்சு | 5-6 நிமிடங்கள் | |
| | சித்திரம் | 2மணித்தியாலம் | கிராமிய அபிவிருத்தியில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்களிப்பு |
| மத்திய பிரிவு தரம் 09 தரம் 08 | கட்டுரை | 45 நிமிடம் (400 சொற்களுக்கு குறையாமல்) | சமத்துவ வாழ்விற்கு கூட்டுறவு |
| | பேச்சு | 4-5 நிமிடங்கள் | கூட்டுறவே சிறந்த சமூகத்திற்கான அடித்தளம் |
| கீழ்ப் பிரிவு தரம் 07 தரம் 06 | கட்டுரை | 45 நிமிடம் (250 சொற்களுக்கு குறையாமல்) | கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் |
| | பேச்சு | 4-5 நிமிடங்கள் | எமது வாழ்வில் கூட்டுறவு |
| தரம் 11,12, 13 | வினா விடைப் போட்டி | | கூட்டுறவு, பொது அறிவு, விஞ்ஞானம் என்பன தொடர்பானவை |

**யாழ் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கான போட்டிகளின் விபரம்**

| போட்டி விபரம் | நேரம் | தலைப்புக்கள் |
|---|---|---|
| பணியாளர்களுக்கான பேச்சுப்போட்டி | 5-7 நிமிடங்கள் | 1.'நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கூட்டுறவு இயக்கம் ஆற்றக்கூடிய பங்களிப்பு' |
| பணியாளர்களுக்கான கட்டுரைப்போட்டி | 1.5 மணித்தியாலம் (1200 சொற்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும்.) | 2.'இன்றைய நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்வதில் பணியாளர் பங்கு'. |
| அங்கத்தவர்களுக்கான பேச்சுப்போட்டி | 5-7 நிமிடங்கள் | 1.'கூட்டுறவின் எதிர் காலம் உறுப்பினர் கைகளிலே' |
| அங்கத்தவர்களுக்கான கட்டுரைப்போட்டி | 1.5 மணித்தியாலம் (1200 சொற்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும்) | 2.கூட்டுறவும் மக்கள் தலைமைத்துவமும்' |
| பணியாளர்களுக்கான வினாடிவினாப்போட்டி | வினாடிவினாப் போட்டியில் ஒரு கூ.சங்கத்தில் இருந்து 4 பேர் கொண்ட குழு மாத்திரமே பங்குபற்றலாம். | பொது அறிவு, கூட்டுறவு அறிவு, தொடர்பானதாக அமையும். |
| மகளிர் குழுக்கான குழுப்பாடல் போட்டி | 6-9 நிமிடங்கள் | பாடல் கூட்டுறவு சம்பந்தமாகவும் கிராமியப் பாடலாகவும் இருத்தல் வேண்டும். |

*அ. குழுப்பாடல் போட்டியில் கூட்டுறவுச் சங்கங்களின் மகளிர் குழு உறுப்பினர்கள் குழுவாகப் பங்குபற்றல் வேண்டும்*
*ஆ. ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் 4 முதல் 6 பேர்கொண்ட ஒரு குழு மாத்திரமே பங்குபற்றமுடியும்.*
*இ. தாளம், சுருதிப்பெட்டி, அனுமதிக்கப்படும். ஏனைய இசைக்கருவிகள் எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது.*
*ஈ. விண்ணப்பங்கள் யாவும் போட்டியாளர்களினாலேயே சுயமாகத் /தயாரித்து (சங்கப் பணியாளர்கள், அங்கத்தவர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள்) தலைவர் பொதுமுகாமையாளர் ஆகியோரின் சிபார்சுடனும் அனுப்பப்படவேண்டும்.*

**விண்ணப்ப முடிவு திகதி :**
**16.07.2005**

## பாடசாலை மாணவர்களுக்கான போட்டி நிபந்தனைகள்

1. ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு பாடசாலையில் இருந்து 5 பேர் மாத்திரமே பங்குபற்ற முடியும்.
2. வினாவிடைப்போட்டிக்கு ஒரு பாடசாலையில் இருந்து 4பேர் கொண்ட ஒரு குழு மட்டுமே பங்குபற்ற முடியும்.
3. சித்திரப்போட்டிக்கு பென்சில், றேசர், கலர் மாணவர்கள் கொண்டுவர வேண்டும்.
4. பாடசாலை மாணவர்களின் விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர்களால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதி 16.07.2005
6. போட்டிகள் யாவும் யாழ்ப்பாணம் இல.12 காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் அன்றைய தினம் போட்டிகள் நடைபெறும் நேரத்திற்கு முன்னதாக சமூகமளித்து போட்டிகளில் பங்குபற்றல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

*செயலாளர்,*
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்,
இல:12 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

போட்டிகள் தொடர்பான மேலதிக விபரங்கள் ஏதாவது தேவைப்படின் எமது அலுவலகத்தில் அல்லது தங்கள் பகுதி கூட்டுறவுச் சங்கங்களில் கடமை நேரங்களில் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12 காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் 2 ஆம் மாடியில் இயங்கும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால் 2005 ஆம்